

வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு தொகுதி மத்திய ஒன்றியம் ஊணைவாணியம் பாடி ஊராட்சியில் புதிய நியாயவிலைக் கடையை தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மு.பாபு, வெங்கடேசன், கிருஷ்ணமேனன் ராமச்சந்திரன், செந்தில்குமார், அஸ்லம்பாஷா சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரையாற்றினார்!

*திண்டுக்கல், டிச. 31-*

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உணவு மற்றும் உணவுப் பொருள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசியதாவது:-



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் அர. சக்கரபாணி பேசினார்.

இளைஞர் அணி நிர்வாகிகள் தமிழ்நாடு அரசின் சாதனைகளை வீடு தோறும் எடுத்துக்கூறி மீண்டும் ஏழாவது முறையாக தி.மு.க. ஆட்சி அமைத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்க அயராது உழைக்க வேண்டும். வருகின்ற ஜன 31ம் தேதி விருதுநகரில் நடைபெறும் இளைஞரணி கூட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் கூற்றுப்படி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டின்படி சீருடையில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். வருகின்ற காலங்களில் தமிழ்நாடு முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக கொடுப்பதாக தெரிவித்துள்ளார்கள். அதனை இளைஞர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பேசினார்.

இந்நிகழ்வில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், மாவட்ட அவைத் தலைவர் மோகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, முன்னாள் மத்திய கூட்டுறவு சங்க தலைவர் ஜோதீஸ்வரன், நகரச்செயலாளர் வெள்ளைச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜ், சுப்பிரமணி, பொன்ராஜ்,

பாலு, தங்கம், சீனிவாசன், சாமிநாதன், கவிதா பார்த்திபன், ஷேக் சிக்கந்தர்பாட்சா, செயற்குழு உறுப்பினர் கண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹரிஹரசுதன், துணை அமைப்பாளர்கள் பாண்டியராஜன், ஆனந்தராஜ், ரவிசங்கர், ராஜ்குமார், இப்ரின்ஆசித் உள்ளிட்ட மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், கம்மாபுரம் கிழக்கு ஒன்றிய முன்னாள் பொருளாளர் ஆர்.தேவேந்திரன் முத்தாண்டிக்குப்பம் கடைவீதியில் புதியதாக தொடங்கியுள்ள, டி.எஸ்.பழக்கடை மற்றும் தேநீர் விடுதியை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தார். எம்.ஆர்.இராதாகிருஷ்ணன்,எம்.எல்.ஏ, ஒன்றிய கழக செயலாளர் ந.ஆசைத்தம்பி, பண்ருட்டி தெற்கு ஒன்றிய துணை செயலாளர் சுமதி நந்தகோபால், பொறுப்புக்குழு உறுப்பினர்கள், எம்.மகாலிங்கம் வி.எஸ்.டி.சக்திவேல் ,முடப்பள்ளி பழனிச்சாமி,கே.ரவிச்சந்திரன் இளைஞர் அணி ஆர்.அருண்குமார், தகவல் தொழில்நுட்ப அணி ஆர்.விநாயகமூர்த்தி, முத்தாண்டிக்குப்பம் கார்த்தி,மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பேரூராட்சி தலைவர் மிதுன் சக்கரவர்த்தி ஏற்பாட்டில் தேனி அருகே பி.சி.பட்டியில்

# மாற்றுக் கட்சியினர் 1000 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. முன்னிலையில்!

*தேனி, டிச.31-*

பி.சி.பட்டியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி முன்னிலை வகித்தார். தேனி வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் சக்கரவர்த்தி வரவேற்று பேசினார். பேரூர் தி.மு.க. செயலாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

விழாவில், பேரூராட்சி சேர்மன் வக்கீல் மிதுன் சக்கரவர்த்தி ஏற்பாட்டில், வடக்கு மாவட்டச் செயலாளர்.தங்கதமிழ்செல்வன் எம்.பி. முன்னிலையில், பிசிபட்டியைச் சேர்ந்த அ.தி.மு.க., அ.ம.மு.க., த.வெ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி ஆயிரம் பேர் தி.மு.க.வில் இணைந்தனர்.

இதில் பெரியகுளம் எம்.எல்.ஏ. சரவணக்குமார், தீர்மானக்குழு இணை செயலாளர் ஜெயக்குமார், உயர்நீதி மன்ற வக்கீல் நிஷாந்த், நகர செயலாளர்கள் தேனி தெற்கு நாராயணபாண்டியன், பெரியகுளம் முகமது இலியாஸ், போடி புருஷோத்தமன், ஒன்றிய செயலாளர்கள் தேனி வடக்கு சக்கரவர்த்தி, பெரியகுளம் வடக்கு வக்கீல் பாண்டியன், சின்னமனூர் மேற்கு முருகேசன், பேரூராட்சி சேர்மன்கள் பூதிப்புரம் கவியரசு, மார்க்கையன் கோட்டை ஓ.ஏ.முருகன், மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில் முருகன், திருக்கண்ணன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் டாக்டர்.வி.ஆர்.ராஜன், பொதுக் குழு உறுப்பினர் ராஜா ரமேஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆசைத்தம்பி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி முத்துராஜ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வக்கீல் ராஜசேகர், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜேஷ், மீனாட்சிபுரம் பேரூர் செயலாளர் செல்வராஜ், பிசிபட்டி பேரூர்

அவைத்தலைவர் ஜோதிராம், பேரூராட்சி கவுன்சிலர்கள் பாண்டீஸ்வரன்,சந்திரா, சுகன்யா, மகாராஜன், கணேஷ்பாபு, போடி ஒன்றிய துணை செயலாளர்தமிழ்வாணன் அரசுபோக்குவரத்துக் கழக தொழிற் சங்க முருகன், வீரமுத்து உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




வேலூர் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட காட்பாடி வடக்கு பகுதி வார்டு எண்7 பாகம் எண் 119, 121, 124ல் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை காட்பாடி வடக்கு பகுதி கழக செயலாளர் ஜி.வன்னியராஜா தலைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாவட்டப் பொறுப்பாளர், டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார். உடன் புஷ்பலதா வன்னியராஜா, லோகநாதன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

